# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,111 — 1960 අප්‍රේල් 22 වැනි සිකුරාදා — 22.4.1960

12,111 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | 19 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## துணைவிதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்து கரவாகு வடக்கு கிராமப்பகுதியின் கிராமச் சங்கம் ஆக்கியதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான, 9,773 ம் இலக்க விசேட "கெசெற்"றில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் அங்கீகரித்ததுமான துணைவிதிகள்.

வீ. சி. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1960 ம் ஞூ ஏப்றில் மீ 6 ந் உ.

---

### வாகன, மிருக வரிபற்றிய துணைவிதிகள்

1. (அ) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி திரட்டும் வாகன, மிருக வரியின்பொருட்டு, அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டிருப்பதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான பத்திரத்தின் மாதிரியில் ஒரு விபர அட்டவணையை தலைவரிடம் கொடுக்கவேண்டும்.

(ஆ) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி வரிசெலுத்தப் பாத்திரப்பட்டவர், 1960 ம் ஆண்டின்பொருட்டு, (அ) பந்தியில் சொல்லப்பட்ட அட்டவணையை எழுதி நிரப்பி 1960 ம் ஆண்டு மே மாதம் முப்பத்தொராந் திகதிக்குப் பிந்தாமல் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தமது சொந்தத்தில், பாதுகாப்பில், அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் இனிவரும் எந்த வருடத்துக்கும் அத்தகைய அட்டவணையைத் தரும்படி கேட்கப்படமாட்டார்.

2. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1 ம் துணைவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த ஒவ்வொருவரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1960 ம் வருடத்துக்கு, அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள் மிருகங்களின் பொருட்டு, அவ்வருடத்து ஜூலை மாதம் முப்பத்தொராந் திகதிக்குப் பிந்தாமல் வரிகொடுக்கவும் ;

(ஆ) இனிவரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள் மிருகங்களில் இனிவரும் அவ்வருடத்தில் முப்பது நாட்களுக்கு மேல் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருப்பனவற்றுக்கு அவ்வருடம் மார்ச் மாதம் முப்பத்தொராந் திகதிக்குப் பிந்தாமல் வரி கொடுக்கவும் பாத்திரராவார்.

3. எவரேனும் 1 ம் துணைவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்தபின்னர், அந்த அட்டவணையில் சொல்லப்படாததும் சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது 1 ம் துணைவிதியின்படி அட்டவணை எதுவும் கொடுக்காத எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால் வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் வாங்கிய அல்லது வைத்திருக்கவேணும் உபயோகிக்கவேணும் தொடங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அவ்விதம் வாங்கியதை, வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறித்து தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில் எழுத்துமூலமான விபர அறிக்கை ஒன்றையும் கொடுக்கவேண்டும்.

4. சட்டத்தின் 47(2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 3 ம் துணைவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கை கொடுக்கும் ஒவ்வொருவரும் அந்த அறிக்கை எந்த வருடத்தில் கொடுக்கப்படுகின்றதோ அந்த வருடத்துக்கும் அதற்குப் பின்வரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அறிக்கையில் காட்டியுள்ள, அவருடைய சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அதன் பொருட்டு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரிகொடுக்கப் பாத்திரராவார்.

5. (1) 1 ம் துணைவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் துணைவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர் அந்த அட்டவணையில் அல்லது அறிக்கையில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரிகொடுக்கும் பாத்தியதையிலிருந்து தவிர்த்துவிடும்படி சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருதற்கான காரணங்களைக் காட்டி உடனே எழுத்தில் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(2) 1 ம் துணைவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் துணைவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர் எந்த வாகனத்தையேனும் அல்லது மிருகத்தையேனும் ஆட்சிபண்ணுமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விடும் ஒவ்வொருவரும் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தைத் தாம் ஆட்சி பண்ணுமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விட்டுவிட்டதாக உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவிக்கவேண்டும்.

6. எவரேனும் வரிகொடுத்ததும், வரிசெலுத்தப்பட்ட அவ்வாகனத்துக்கு இதன் " ஆ " அட்டவணையில் காட்டியுள்ள வாகனங்களைப் பேதப் படுத்திக் காட்டும் எழுத்துகளில் அவ்வாகனத்துக்கேற்ற எழுத்துகளையும் அது எந்த வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவு இடாப்பிலுள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத் தகடு ஒன்றைத் தலைவர் கொடுக்க வேண்டும். அத்தகடு எதுவும் பாவிப்பினுல் அல்லது வேறுவகையில் தெளிவாகத் தெரியாது போனுல் அல்லது உருவழிந்துபோனுல் அதன் சொந்தக்காரர் அதைத் தலைவரிடம் திருப்பிக்கொடுத்து ஐம்பது சதமும் செலுத்திஞல் புதிய தகடு ஒன்றைப் பெறும் உரித்துள்ளவர் ஆவார், அத்தகடு எதுவும் காணுமற்போய்விட்டது அல்லது களவு போய்விட்டது என்று சத்தியக் கடுதாசிமூலமாகவேனும் அல்லது வேறு விதத்திலேனும் தலைவருக்கு நம்பிக்கை ஏற்படுமாயின் அவர் அதன் சொந்தக்காரர் அறுபது சதம் செலுத்தி விண்ணப்பிக்குங்கால் அச்சொந்தக்காரருக்கு ஒரு புதிய தகட்டைக் கொடுக்கலாம்.

7. ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது பொறுப்பாளி அந்த வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஒரு பாகத்தில் மாட்டி வைக்கவேண்டும்.

8. ஏதேனும் தெரு அல்லது பாதை வழியாகச் சென்றுகொண்டிருக்கும் எந்த வாகனத்தையும் அந்த வாகனத்தில் மாட்டிவைக்க வேண்டுமென்று 7 ம் துணைவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற்பொருட்டு தலைவரேனும் அல்லது பொலிசு உத்தியோகத்தர் எவரேனும் அல்லது தலைவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எவரேனும் நிறுத்துவதும் தடுத்து வைப்பதும் நீதியாகும். அந்த வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி தலைவராலாவது அல்லது அத்தகைய வேறு உத்தியோகத்தராலாவது கேட்டுக்கொள்ளப்படுங்கால் அந்த வாகனத்தை நிறுத்தி தலைவரை அல்லது அத்தகைய வேறு உத்தியோகத்தரை அத்தகட்டைப் பார்வையிட அனுமதிக்கவேண்டும்.

9. இத்துணைவிதிகளில்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

" சங்கம் " என்பது மட்டக்களப்பு, மாவட்டத்து கரவாகுவடக்கு கிராமப்பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

" சட்டம் " என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப் பொருள்படும்.

### " அ " அட்டவணை

பத்திரம் இல :

கரவாகு வடக்கு கிராமப் பகுதியின் கிராமச் சங்கம். வட்டார இல :

வாகன, மிருக வரிபற்றிய துணைவிதிகளின் தாற்பரியப்படி கொடுக்கப்படவேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் அட்டவணை. சொந்தக்காரர் பெயர் :—

கிராமம் : ————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபரங்கள் | எண்ணிக்கை (சொல்லில்) | குறிப்புகள் (துவிச்சக்கர வண்டிகளாயின் உற்பத்தியாளரின் இலக்கம் தருக) |
|---|---|---|
| பாரவண்டிகள், பிரயாண வண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இன வண்டிகளும் .. .. | | |
| இரட்டை மாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாணவண்டிகள் அல்லது ஒற்றை மாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. .. .. | | |
| றிக்ஷோக்கள் .. .. .. | | |
| கைவண்டிகள் .. .. .. | | |
| துவிச்சக்கரவண்டிகள் .. .. .. | | |
| யானைகள் .. .. .. | | |
| குதிரைகள் .. .. .. | | |
| கோவேறு கழுதைகள் .. .. .. | | |
| கழுதைகள் .. .. .. | | |

நானறிந்தவரை, மேற்படி அறிக்கை உண்மையானதென்று அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————,

திகதி : ————. சொந்தக்காரரின் கையொப்பம்.

### " ஆ " அட்டவணை

| | |
|---|---|
| பாரவண்டி, பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | க. வ. கி. ச. பொ. |
| இரட்டைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | க. வ. கி. ச. இ. |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | க. வ. கி. ச. ஒ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. .. .. .. | க. வ. கி. ச. றி. |
| கைவண்டி ஒவ்வான்றுக்கும் .. .. .. | க. வ. கி. ச. கை. |
| துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. .. .. | க. வ. கி. ச. து. |

## கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி யாழ்ப்பாண மாவட்டத்து வட்டுக்கோட்டைக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேட " கெசற் "றில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக் கொண்டு, அவரால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தர செயலாளர்,
உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 6 ந் உ.

உபவிதிகள்

### உத்தியோகஸ்தர்களும் வேலையாட்களும்

1. சங்கத்துக்கு வருமதியான எல்லா வரிகளையும் அல்லது கட்டணங்களையும் தண்டுவதற்கும் தலைவரின் கையொப்பத்தின் பிரதி லிபியையும் சங்க முத்திரையையும் கொண்ட பற்றுச் சீட்டுகளை வழங்குவதற்கும் சங்க உத்தியோகஸ்தர் அல்லது பிறர் எவருக்கும் தலைவர் எழுத்தில் அதிகாரம் அளிக்கலாம்.

2. எவரும் வேண்டுமென்று.—

(அ) தலைவரையாவது அல்லது சங்கத்தின் வேறு உத்தியோகஸ்தர் எவரையுமாவது கிராம சமுதாயச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் உண்டாக்கப்பட்ட உபவிதிகள் எதனுலும்

அல்லது எதன்படியும் அந்த தலைவருக்கு அல்லது அந்த வேறு உத்தியோகஸ்தருக்கு கொடுக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட தத்துவம், கடமை அல்லது அலுவல் எதையும் பிரயோகிக்க நிறைவேற்ற அல்லது செய்யவிடாது தடுக்கலாகாது ; அல்லது

(ஆ) சங்கத்தால் அல்லது சங்கத்துக்காக வேலைக்கமர்த்தப்பட்ட வேலையாள் அல்லது தொழிலாளி எவரையும் தலைவரால் அல்லது சங்கத்தின் வேறு உத்தியோகஸ்தர் எவராலும் அவருக்கு இடப்பட்ட சட்டமுறையான கடமை எதையும் செய்யவிடாது தடுக்கலாகாது.

3. இந்த உபவிதிகளில்.—

" தலைவர் " என்பது சங்கத்தலைவர் எனப் பொருள்படும் ;

" சங்கம் " என்பது யாழ்ப்பாண மாவட்டத்து வட்டுக்கோட்டைக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

" சட்டம் " என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப்பொருள்படும்.

---

## விளம்பரம்

1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 10 ந் திகதி செவ்வாய்க் கிழமையும், 11 ந் திகதி புதன் கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாதலால், 1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 13 ந் திகதி பிரசுரிக்கப்படவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 6 ந் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்ணுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மீ 9 ந் ஆ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.